**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 60** **நாள்: 19.04.2019**

**12ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் 93.73 சதவீத தேர்ச்சி மற்றும் 4 பள்ளிகள் 100 சதவீதம் தேர்ச்சியும் பெற்றுள்ளன என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் 32 சென்னை மேல்நிலைப்பள்ளிகள் சிறப்பாக இயங்கி வருகிறது. அதில் 2018–2019ஆம் கல்வி ஆண்டில் நடைபெற்ற அரசு 12–ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 1796 மாணவர்கள், 3045 மாணவியர்கள் என மொத்தம் 4841 மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுதினார்கள். இதில் 1534 மாணவர்கள், 2843 மாணவியர்கள் என மொத்தம் 4377 மாணவ, மாணவியர்கள் தேர்ச்சிப் பெற்றுள்ளனர். தேர்ச்சி சதவீதம் 93.73 ஆகும். இத்தேர்ச்சி விகிதம் 2017–18ஆம் கல்வி ஆண்டு தேர்ச்சி விகிதத்தை விட 1.62 சதவீதம் அதிகமாகும்.

**2018–19ஆம் கல்வி ஆண்டில்..**

| | |
|---|---|
| 100 சதவீதம் தேர்ச்சி விழுக்காடு பெற்ற பள்ளிகள் | .. 4 |
| 100/100 மதிப்பெண் பெற்ற மாணவ/மாணவிகள் | .. 4 |
| ஐநூற்று ஐம்பதுக்கு மேல் மதிப்பெண் பெற்றவர்கள் | .. 7 |
| ஐநூற்று மேல் மதிப்பெண் பெற்றவர்கள் | .. 58 |
| நானூற்று ஐம்பதுக்கு மேல் மதிப்பெண் பெற்றவர்கள் | .. 168 |

**100 சதவீதம் தேர்ச்சி விழுக்காடு பெற்ற பள்ளிகள் .. 4**

1. சென்னை மேல்நிலைப்பள்ளி, சுப்புராயன் தெரு
2. சென்னை மேல்நிலைப்பள்ளி, கோயம்பேடு
3. சென்னை மேல்நிலைப்பள்ளி, நெசப்பாக்கம்
4. சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, நுங்கம்பாக்கம்

12–ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 100 சதவீத தேர்ச்சி பெற்ற சென்னை மாநகராட்சிப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு அவர்களின் சிறந்த செயல்பாட்டை பாராட்சி பள்ளிகளின் வளர்ச்சிக்காக ரூ.1,00,000/–க்கான காசோலை மற்றும் புத்தகங்களை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (19.04.2019) வழங்கினார். மேலும், 12–ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் ஆணையாளர் அவர்கள் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியின் போது துணை ஆணையாளர் (கல்வி) திரு.பெ.குமாரவேல் பாண்டியன் இ.ஆ.ப., அவர்கள், கல்வி அலுவலர் திரு.இ.கோவிந்தசாமி மற்றும் தலைமை ஆசிரியர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**